முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

107—

பகுதிநேர நியாய விலைக் கடை

***10618—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, கொரட்டூர் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து கொ. குச்சிப்பாளையம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஒன்றியம், கூவாகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கொரட்டூர் கிராம முழுநேர நியாய விலைக் கடை 674 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில், கொ. குச்சிப்பாளையம் பகுதியிலுள்ள 175 குடும்ப அட்டைகளைப் பிரித்து, (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், கொஞ்சம் அமைதி காக்கவும்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தருமாறு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கோரிக்கையைப் பரிசீலித்ததில், சட்ட விதிகளுக்குட்பட்டு இருந்ததால், 1–3–2019 அன்று முதலே அந்தக் கடை திறக்கப்பட்டு, மக்களுடைய பயன்பாட்டில் இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆன்மாவை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் காவேரி பிரச்சினையில் தமிழக உரிமையைக் காக்க, சட்டப் போராட்டம் நடத்தி, காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டு காவேரியை மீட்டெடுத்தார்கள். அந்தத் தாய்க்கு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, காவேரி டெல்டா விவசாயிகள் அனைவரும் 'பொன்னியின் செல்வி' என்ற பட்டத்தை வழங்கினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் சிறப்பாக ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், காவேரி டெல்டா பகுதியின் விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக காவேரி டெல்டா பகுதியை 'பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம்' என அறிவித்ததையடுத்து, அங்குள்ள விவசாயிகளெல்லாம் ஒன்று கூடி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு 'காவேரி காப்பாளர்' என்ற பட்டத்தை அளித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் விடிவெள்ளியாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்கி, அண்ணன் அவர்களுக்கு உறுதுணையாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், நான் வைத்த கோரிக்கையை ஏற்று, குச்சிப்பாளையம் கிராம மக்களின் 20 ஆண்டு கால கோரிக்கையை ஏற்று, பகுதிநேர நியாய விலைக் கடையைத் திறந்ததற்காக என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதியில் கிட்டத்தட்ட 15 பகுதிநேர நியாய விலைக் கடைகள் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவற்றில், முக்கியமாக, பேரங்கியூர் குச்சிப்பாளையம் என்ற பகுதி தேசிய நெடுஞ்சாலைக்கு அப்பால் இருக்கின்ற ஒரு கிராமமாக இருக்கின்றது. அந்தக் கிராமத்தில் 2006 ஆம் ஆண்டு ஒரு புதிய நியாய விலைக் கடை கட்டப்பட்டது. ஆனால், அந்தக் கடை திறக்கப்படாமல் இருக்கிறது. தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து

பேரங்கியூர் சென்று அத்தியாவசியப் பொருட்களை வாங்குவது என்பது, அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதிக்காக சட்ட விதிகளைத் தளர்த்த வேண்டும். ஏனெனில், அங்கு 100–க்கும் குறைவாகவே குடும்ப அட்டைகள் இருக்கின்றன. எனினும், மக்கள் தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து செல்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விதிகளைத் தளர்த்தி, அங்கே புதியதாக ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத் தருவாரா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கையாகும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைந்த பிறகு, 2011 ஆம் ஆண்டு முதல் 29–2–2020 அன்று வரை 676 முழுநேர நியாய விலைக் கடைகள், 1,752 பகுதிநேர நியாய விலைக் கடைகள் என மொத்தம் 2,428 கடைகள் திறந்து வைக்கப்பட்டு, அவை மக்கள் பயன்பாட்டில் உள்ளன. அதுமட்டுமல்லாது, ஏறத்தாழ 46 நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாக சரக்குகள் விநியோகம் செய்யப்படுகின்றன. ஏற்கெனவே, என்ன சட்ட விதிகள் இருந்தனவோ, அந்த சட்ட விதிகளுக்குட்பட்டு கடைகள் திறக்கப்பட்டன. நான் மற்றதை சொல்லவில்லை. சட்ட விதிகளின்படி, ஒரு கடையை தாய்க் கடையிலிருந்து பிரித்த பிறகு, அந்தக் கடையில் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; அந்தக் கடை தாய்க் கடையிலிருந்து 1½ கி.மீ. தூரம் இருக்க வேண்டும்; குடும்ப அட்டைகளைப் பிரித்த பிறகு தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் இருக்கின்றன. எனினும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு, விருப்புரிமையின் அடிப்படையில் கடைகளைத் திறக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த விருப்புரிமை அதிகாரத்தின்படி, சட்டம்–ஒழுங்கு பாதிக்கப்படும் என்ற சூழ்நிலை இருந்தாலோ, சமூகப் பிரச்சினை ஏற்படும் என்ற நிலை இருந்தாலோ, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று, தேசிய நெடுஞ்சாலையை, நான்கு வழிச் சாலையைக் கடந்து சென்று மக்கள் பொருட்களை வாங்குகின்ற சூழ்நிலை இருந்தாலோ, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே

அந்தக் கடையைத் திறந்து கொடுக்கலாம். குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை முக்கியமல்ல, மக்களுடைய உயிர்தான் முக்கியம் என்பதை இந்த அரசு புரிந்துகொண்டு, மேற்காணும் சட்டத் திருத்தத்தை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதனடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாக அரசுத் துறையின் மூலமாகப் பரிசீலிக்கப்பட்டு, உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

முற்பகல் 10–15

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, என்னுடைய, உளுந்தூர்பேட்டை தொகுதியிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன சட்டதிட்ட விதிகளுக்குட்பட்டு தாய்க் கடையைப் பிரிக்கும்பட்சத்தில், தாய்க் கடையில் 500 கார்டுகள் இருக்க வேண்டும் என்ற விதிகளுக்குட்பட்டு, கிட்டத்தட்ட 5 கிராமங்களிலே பகுதிநேர நியாய விலைக் கடை கேட்கிறார்கள். பரிந்தல் நியாய விலைக் கடையைப் பிரித்து பரிந்தல் மேட்டூர் காலனிக்கு ஒரு கடையும், குன்னத்தூர் கிராமத்திலே கடையைப் பிரித்து குன்னத்தூர் காலனிப் பகுதிக்கு ஒரு கடையும், சீதேவி கிராமத்திலே இருக்கிற தாய்க் கடையைப் பிரித்து, சவுரியன்புரத்தில் ஒரு கடையும், குணமங்கலம் கிராமத்தில் இருக்கிற தாய்க் கடையிலிருந்து பிரித்து, குணமங்கலம் முஸ்லிம் பகுதியில் ஒரு கடையும் அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அந்தப் பகுதி மக்களுக்கு பகுதிநேர நியாய விலைக் கடையை வழங்குவாரா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே

பல்வேறு கோரிக்கைகளைக்கொடுத்திருக்கிறார்.துறைரீதியாகஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று செயல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், இங்கிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுடைய அதிகப்படியான கேள்வி என்னவென்றால், நான் கூட்டுறவுத் துறை அமைச்சர் என்ற அடிப்படையில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுடைய வளர்ச்சி மற்றும் அவற்றின் செயல்பாடுகள் இவற்றையெல்லாம் விட்டு விட்டு, பகுதிநேரக் கடைகள் அமைக்க வேண்டும் என்றுதான் அதிகமான கேள்விகள் வருகின்றன. எனவே, மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே நான் இதை எடுத்துச்சொல்லி, எங்கள் துறையின் மூத்த அதிகாரிகளை அழைத்து பேசுகின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளிலெல்லாம் 50 கார்டுகள், 60 கார்டுகள், 100 கார்டுகள் இருக்கின்றனவோ, கிராமங்கள் தாண்டி, 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தூரம் வந்து பொருட்களை வாங்குகிறார்கள் என்றால், அதையெல்லாம் consider செய்து நகரும் கடைகளாகக் கொண்டுவருவதற்கு ஆய்வு செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு தீவிரமாகப் பரிசீலித்து, நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதிவிரைவிலே நல்ல பதில் இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று நிச்சயமாக அறிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

108—

மின்மாற்றியைத் தரம் உயர்த்துதல்

***27280—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லப்பாக்கம் பேரூராட்சி, 15–வது